*முடிவுத் திகதி – 2025.05.07*

# போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு

## <u>வெற்றிடங்கள்</u>

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கீழ் குறிப்பிடப்படும் **திட்டங்களின் திட்டப் பணிப்பாளர் மற்றும் பிரதி திட்டப் பணிப்பாளர்** பதவிகளுக்காக அரச, பகுதியளவு அரச மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிரந்தர உத்தியோகத்தரகள் உட்பட அனைத்து இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த நியமனங்கள் நிதி அமைச்சினால் *2019.03.05* ஆந் திகதி வெளியிடப்பட்ட *01/2019* ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாக இருக்கும்

| **கருத்திட்டத்தின் பெயர்** | **திட்டத்தின் பெறுமதி**<br>***( அ.டொலர் மில்லியன்)*** | **பதவியின் பெயர்** | **வெற்றிடங்கள் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| பதுளை செங்கலடி வீதி மேம்பாட்டுத் திட்டம் | *(அமெரிக்க டொலர் (15 - 50) மில்லியன் வகுதி)* | திட்டப் பணிப்பாளர் | ***01*** |
| | | பிரதி திட்டப் பணிப்பாளர் | ***01*** |
| நானாவித வெளிநாட்டு உதவித் திட்டம் *(MFAP)* | *(அமெரிக்க டொலர் (50 - 100) மில்லியன் வகுதி)* | பிரதி திட்டப் பணிப்பாளர் | ***01*** |
| கண்டி பன்முக போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டம் *(KMTTDP)* | | திட்டப் பணிப்பாளர் | ***01*** |
| மத்திய அதிவேக திட்டம் - கட்டம் *III* *(CEP III)* | *250 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிக தொகை வகுதி* | திட்டப் பணிப்பாளர் | ***01*** |
| | | பிரதி திட்டப் பணிப்பாளர் | ***01*** |
| துறைமுக அணுகல் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை திட்டம் *(PAEHP)* | | திட்டப் பணிப்பாளர் | ***01*** |
| | | பிரதி திட்டப் பணிப்பாளர் | ***01*** |

**மேற்படி 1/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை, இணைப்பு 01 இன் பிரகாரம்**

**திட்டப் பணிப்பாளர் (PS 01) அடிப்படைத் தகைமைகள் பின்வருமாறு**

| அடிப்படை கல்வித் தகைமைகள் | திட்டத்தின் பெறுமதிக்கு ஏற்ப பதவிக்கான தகுதி அனுபவம் | | |
|---|---|---|---|
| **கீழுள்ள (1) அல்லது (2) அல்லது (3)** | **(அமெரிக்க டொலர் 15-50 மில்லியன் வகுதி)** | **(அமெரிக்க டொலர் 50-100 மில்லியன் வகுதி)** | **250 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிக தொகை வகுதி** |
| 01) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமானிப் பட்டத்தை வெற்றிகரமாக முடித்திருத்தல்.<br>அல்லது<br>சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு சமமான தகுதியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்.<br>அல்லது<br>சம்பந்தப்பட்ட துறையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொண்ட ஒரு இணை உறுப்புரிமை/ அதனையொத்த தொழிற் தகைமை | மற்றும்<br>ஆகக் குறைந்தது 10 வருட முகாமைத்துவ மட்ட அனுபவம் அவற்றில் 05 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருத்தல் வேண்டும். | மற்றும்<br>ஆகக் குறைந்தது 12 வருட முகாமைத்துவ மட்ட அனுபவம் அவற்றில் 06 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருத்தல் வேண்டும். | மற்றும்<br>ஆகக் குறைந்தது 16 வருட முகாமைத்துவ மட்ட அனுபவம் அவற்றில் 08 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருத்தல் வேண்டும். |
| 02) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமானிப் பட்டத்தை வெற்றிகரமாக முடித்திருத்தல்.<br>அல்லது<br>சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு சமமான தகுதியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்.<br>அல்லது<br>சம்பந்தப்பட்ட துறையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொண்ட ஒரு இணை உறுப்புரிமை/ அதனையொத்த தொழிற் தகைமை<br>மற்றும்<br>சம்பந்தப்பட்ட துறையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஒரு கூட்டுறவு/பட்டய உறுப்புரிமை அல்லது ஒத்த தொழில்முறை தகைமை அல்லது சம்பந்தப்பட்ட துறையில் ஒரு பட்டப் பின்படிப்பு பட்டம். | அத்துடன்<br>ஆகக் குறைந்தது 08 வருட முகாமைத்துவ மட்ட அனுபவம் அவற்றில் 04 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருத்தல் வேண்டும். | அத்துடன்<br>ஆகக் குறைந்தது 10 வருட முகாமைத்துவ மட்ட அனுபவம் அவற்றில் 05 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருத்தல் வேண்டும். | அத்துடன்<br>ஆகக் குறைந்தது 14 வருட முகாமைத்துவ மட்ட அனுபவம் அவற்றில் 07 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருத்தல் வேண்டும். |
| 03) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமானிப் பட்டத்தை வெற்றிகரமாக முடித்திருத்தல்.<br>அல்லது<br>சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு சமமான தகுதியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்.<br>மற்றும்<br>சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம்<br>அத்துடன்<br>சம்பந்தப்பட்ட துறையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொண்ட ஒரு கூட்டுறவு/பட்டய உறுப்புரிமை அல்லது ஒத்த தொழில்முறை தகைமை | அத்துடன்<br>ஆகக் குறைந்தது 06 வருட முகாமைத்துவ மட்ட அனுபவம் அவற்றில் 03 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருத்தல் வேண்டும். | அத்துடன்<br>ஆகக் குறைந்தது 08 வருட முகாமைத்துவ மட்ட அனுபவம் அவற்றில் 04 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருத்தல் வேண்டும். | அத்துடன்<br>ஆகக் குறைந்தது 12 வருட முகாமைத்துவ மட்ட அனுபவம் அவற்றில் 06 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருத்தல் வேண்டும். |

**பிரதி திட்டப் பணிப்பாளர் (PS 02) அடிப்படைத் தகைமைகள் பின்வருமாறு**

| அடிப்படை கல்வித் தகைமைகள் | திட்டத்தின் பெறுமதிக்கு ஏற்ப பதவிக்கான தகுதி அனுபவம் | | |
|---|---|---|---|
| கீழுள்ள (1) அல்லது (2) அல்லது (3) | (அமெரிக்க டொலர் 15-50 மில்லியன் வகுதி) | (அமெரிக்க டொலர் 50-100 மில்லியன் வகுதி) | 250 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிக தொகை வகுதி |
| 01) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமானிப் பட்டத்தை வெற்றிகரமாக முடித்திருத்தல்.<br>அல்லது<br>சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு சமமான தகுதியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்.<br>அல்லது<br>சம்பந்தப்பட்ட துறையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொண்ட ஒரு இணை உறுப்புரிமை/ அதனையொத்த தொழிற் தகைமை | மற்றும்<br>ஆகக் குறைந்தது 09 வருட முகாமைத்துவ மட்ட அனுபவம் அவற்றில் 04 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருத்தல் வேண்டும். | மற்றும்<br>ஆகக் குறைந்தது 11 வருட முகாமைத்துவ மட்ட அனுபவம் அவற்றில் 05 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருத்தல் வேண்டும். | மற்றும்<br>ஆகக் குறைந்தது 15 வருட முகாமைத்துவ மட்ட அனுபவம் அவற்றில் 07 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருத்தல் வேண்டும். |
| 02) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமானிப் பட்டத்தை வெற்றிகரமாக முடித்திருத்தல்.<br>அல்லது<br>சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு சமமான தகுதியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்.<br>மற்றும்<br>சம்பந்தப்பட்ட துறையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொண்ட ஒரு கூட்டுறவு/பட்டய உறுப்புரிமை அல்லது ஒத்த தொழில்முறை தகைமை<br>. | அல்லது<br>ஆகக் குறைந்தது 07 வருட முகாமைத்துவ மட்ட அனுபவம் அவற்றில் 03 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருப்பதுடன், சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் | அல்லது<br>ஆகக் குறைந்தது 09 வருட முகாமைத்துவ மட்ட அனுபவம் அவற்றில் 04 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருப்பதுடன், சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் | அல்லது<br>ஆகக் குறைந்தது 13 வருட முகாமைத்துவ மட்ட அனுபவம் அவற்றில் 06 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருப்பதுடன், சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் |
| 03) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமானிப் பட்டத்தை வெற்றிகரமாக முடித்திருத்தல்.<br>அல்லது<br>சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்படிப்புக்கு சமமான தகுதியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்.<br>மற்றும்<br>சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் | அத்துடன்<br>ஆகக் குறைந்தது 05 வருட முகாமைத்துவ மட்ட அனுபவம் அவற்றில் 02 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருத்தல் வேண்டும். | அத்துடன்<br>ஆகக் குறைந்தது 07 வருட முகாமைத்துவ மட்ட அனுபவம் அவற்றில் 03 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருத்தல் வேண்டும். | அத்துடன்<br>ஆகக் குறைந்தது 11 வருட முகாமைத்துவ மட்ட அனுபவம் அவற்றில் 05 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமாயிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| மற்றும்<br>சம்பந்தப்பட்ட துறையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொண்ட ஒரு கூட்டுறவு/பட்டய உறுப்புரிமை அல்லது ஒத்த தொழில்முறை தகைமை | | | |
| *04)* அரசாங்க அகில இலங்கை சேவையொன்றின் வகுப்பு *I* உத்தியோகத்தர் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் அதனையொத்த தகுதிநிலை. | வகுப்பு *I* பதவியில் ஆகக் குறைந்தது *03* வருட அனுபவத்துடன் | வகுப்பு *I* பதவியில் ஆகக் குறைந்தது *04* வருட அனுபவத்துடன் | வகுப்பு *I* பதவியில் ஆகக் குறைந்தது *06* வருட அனுபவத்துடன் |

---

குறிப்பு

- **தொடர்புடைய துறை என்பது "சிவில் பொறியியல் துறை" என்பதைக் குறிக்கிறது, மேலும் அனுபவமும் தொடர்புடைய துறையில் இருக்க வேண்டும்.**

---

<u>பொதுவான நிபந்தனைகள்:</u>

- ஆட்சேர்ப்பு, சம்பளம், நன்மைகள் மற்றும் பிற சேவை நிபந்தனைகள் நிதி அமைச்சினால் *2019.03.05* ஆந் திகதி வெளியிடப்பட்ட *1/2019*ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படியாகும்.
- தெரிவுகள் ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மற்றும் ஏனைய சுற்றறிக்கை நிபந்தனைகளின் அடிப்படையில் இருக்கும்.
- அனைத்து விண்ணப்பங்களும் இந்த சுற்றறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள வடிவமைப்பின்படி நிரப்பப்பட வேண்டும் என்பதோடு, தொடர்புடைய ஆவணங்களின் அனைத்து பிரதிகளும் அனுப்பப்பட வேண்டும்.
- ஒரு திட்டத்தை விட அதிகமானவற்றுக்கு விண்ணப்பிப்பதாயின், அவை அனைத்தையும் அதே விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.
- வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டால், அந்தப் பகுதியிலும் மற்றும்/அல்லது நாட்டில் எந்த இடத்திலும் பணிபுரிய இணங்க வேண்டும்.

***01.* வயது வரம்பு:**

- வீதி அபிவிருத்தி அதிகார சபை/ அரச, பகுதியளவு அரச உத்தியோகத்தர்களுக்கு *60* வயதிற்கு கீழ்
- ஏனையவர்களுக்கு *64* வயதிற்கு கீழ்

***02* சம்பளம்:**

- சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட *01/2019* ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் அடிப்படையில் வழங்கப்படும்.

***03.* வேலைவாய்ப்பு விதிமுறைகள்:**

- இந்த நியமனம் ஒப்பந்த அடிப்படையிலானது, ஆரம்பத்தில் ஒரு வருட காலத்திற்கானது. சேவைத் தேவைப்பாடுகள் மற்றும் செயலாற்றுகை அடிப்படையில் சேவை நீடிப்பு கருத்திற்கொள்ளப்படலாம்.

- *விண்ணப்பதாரர் ஏற்கனவே வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் நிரந்தரப் பதவியை வகித்தால், நியமனம் 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையில் பத்தி 2.3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள, நிலையான பதவியின் நியமன அதிகாரியால் பரிந்துரைக்கப்பட்ட மற்றும் பரிசீலிக்கப்படும் சரியான விடுவிப்பு அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.*

- *விண்ணப்பத்தை முறையாகப் பூர்த்தி செய்யாத மற்றும் விண்ணப்பத்துடன் சரியான தகவல்களை சமர்ப்பிக்காத வேட்பாளர்கள், மற்றும் 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் பிற தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாதவர்கள் நியமனங்களுக்காக கருத்திற்கொள்ளப்பட மாட்டார்கள்.*

- *நியமனங்களை வழங்குதல் மற்றும் சேவை நீடிப்புகள் குறித்த முடிவு சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய ஏற்பாடுளின்படி அமைச்சின் செயலாளரின் தற்றுணிபின் படியானதாகும்.*

### *04. நிறுவனத் தலைவரின் பரிந்துரை*

*வீதி அபிவிருத்தி அதிகாரசபை/ அரச அல்லது பகுதியளவு அரச துறையில் ஏற்கனவே நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் ஒரு விண்ணப்பதாரர், அவர்களின் நிறுவனத் தலைவர் மூலமாகவும், 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பத்தி 2.3.3 இன் படி, அப்பதவியிலிருந்து விடுவிக்கப்படுவதற்கான அங்கீகாரத்துடனும், விடுவிப்பு அடிப்படையில் பரிந்துரையுடனும் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். (இல்லாதபட்சத்தில், அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.)*

### *05. விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்*

*கீழே கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின்படி முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள், கல்வித் தகுதிகள், பணி அனுபவம் மற்றும் ஏனைய தொடர்புடைய தகவல்களுடன், கடித உறையின் மேல் இடது மூலையில் விளம்பரத்தில் உள்ள பதவி மற்றும் கருத்திட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு, பதிவுத் தபாலில்* ***செயலாளர், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு, "மகனெகும மகமெதுர", இல.216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல*** *என்ற முகவரிக்கு* ***2025.05.07*** *ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.*

### *06. விசேட கவனத்திற்கு*

- ***தரப்பட்டுள்ள படிவத்தின்படி முறையாக நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.***
- ***விண்ணப்பத்துடன் சான்றிதழ் பிரதிகளைச் சமர்ப்பித்த தகைமைகள் மட்டுமே தெரிவுக்காக கவனத்திற் கொள்ளப்படும்.***

*விண்ணப்ப மாதிரி - இணைப்பு*

*மேலதிக விபரங்களுக்கு - 0112887472*

***செயலாளர்***
***போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு***